உ

கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி ௬௰<br>Vol. 60 | திருவள்ளுவர் ஆண்டு 1994<br>சோபகிருது—சித், வைகாசி<br>1964 April, May, | பகுதி 1, 2,<br>No. 1, 2, |
| --- | --- | --- |

## வடக்கும் மேற்கும்

ம. ரா. போ. குருசாமி எம். ஏ.

(பூ. சா. கோ. கலைக் கல்லூரி, கோவை-14)

களவு வழிப்பட்ட கற்பு நெறியினையே தமிழர்கள் சிறப்புடையதாகப் போற்றினர்களென்ற மரபு ஆராய்தற்குரியது. கற்பு நெறியே முடிந்த நோக்கமாயினும் களவொழுக்க வழிபட்ட கற்பு வாழ்க்கையில் தான் நிறையொழுக்கம் உறுதியுற்றுநிற்கும். 'செம்புலப் பெயல் நீரார்' என்று பாடல் தொடரால் பெயர்பெற்ற ஒரு புலவரைச் சங்க இலக்கியம் நமக்குத் தெரிவிக்கின்றது. அப்பாடல் வருமாறு,

"யாயும், ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை)

இப்பாடல் தெரிவிக்கும் நுட்பங்கள் கருதுதற்குரியன சூழ்நிலைகளை வென்று காதலிக்கும் உரிமை அக்காலத்தில்

நிலவியிருந்ததை இப்பாடல் புலப்படுத்துகின்றது ஒட்டு, உறவு என்றிவை இல்லாவிடத்தும் களவு வழிப்பட்டகாதல் கொள்ளுதற்குச் சங்க காலத்துச் சமுதாயம் இடங்கொடுத்தது. அத்தகைய இயற்கையான உளநாட்டத்திற்கு இடம் கொடுத்தது ஏன்? புறச் சூழ்நிலைகளில் பெரிதும் ஈடுபட்டுப் பல்வகை முயற்சியில் பற்பல இடங்களில் பல்வேறு கால நிலைகளில் ஆடவன் வாழ்ந்தான். இத்தகைய நிலையால் ஆடவனின் மனத்தில் நிறை குறைந்து-நிலை குலைந்து-தவறுதல் ஏற்படவழியும், வாய்ப்பும் இருந்தன. தன் ஒட்டு,உறவுகளையெல்லாம் மறந்து துறந்து இவனையே தனக்குரியதலைவனுக ஏற்றுக்கொண்ட தலைவியின் மனநிலையினை நெருக்கடியான நிலைகளில் எண்ணிப் பார்த்தால், தவறுதல் பெரும்பாலும் தவிர்க்கப்பெறும். இயற்கையான கவர்ச்சி வயப்பட்டு, நெஞ்சொடு நெஞ்சாய்க் கலந்தும், கரைந்தும் வாழும் வாய்ப்பு தமக்குள் தாமாகவே உறுதி செய்து கணவன், மனைவியாகிய காதலர்க்கே உண்டு. அத்தகைய காதலர் நெஞ்சில் நன்றியுணர்ச்சியும் இருக்கும். அவ்வுணர்ச்சி நிறையினைக் காக்க வல்லது, பெற்றோரும் பெரியோரும் முடிவுசெய்யும் மண நடைமுறையில் இத்தகைய வாய்ப்பு இருப்பது அருமை; சுருங்கச் சொல்லின், நிறைகாக்கும் தகைமையில் களவு வழிப்படாக் கற்பு நெறியைவிடக் களவு வழிபட்ட கற்பே சிறந்தது.

பரிபாடல் என்னும் சங்கநூல் மேற்குறித்த கருத்தினையே ஒரு பாடலின் அடிப்படைக் கருத்தாகக் கொண்டிலங்குகின்றது. குன்றம்பூதனர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட அப்பாடலில் நான்மறையாளரை விளித்துச் சொல்லும் பகுதி நம் கருத்துக்கு விருந்தாகும்.

நான்மறை விரித்த நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின் சிறந்தது

காதற்காமம் காமத்துச் சிறந்தது
விருப்பு ஓரோத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலின் சிறந்தது கற்பே……
……………………………………………
……………………………………………இத்
தள்ளாப் பொருளியல் பின் தண்டமிழ்
ஆய்வந்திலார் கொள்ளார்இக் குன்றுபயன் [பரிபாடல்-9]

மேற்குறித்த பகுதியன்றி, அப்பாடல் முழுதுமே தமிழ் மொழியின் பொருளிலக்கணச் சிறப்பையும், அச்சிறப்பி னுள்ளும் அகப்பொருளின் பிரிவாகிய களவு வழிப்பட்ட கற்பே சிரியது என்பதனையும் விளக்குவதாகும். அதன் பொருளும், நயமும் ஈண்டு விரிப்பின் பெருகும். மேற் குறித்த பகுதியில் 'பொருளியல்பின் தண்தமிழ் என்ற தொடர்க்கு, டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் குறித்துள் விசேடக் குறிப்பினை மட்டும் இங்கே காண்போமாக:

"பொருளியற்பிற் றண்டமிழ்" —பொருளிலக்கணம் தமிழுக்குச் சிறப்புடையதென்பதையும், அதனுள் களவுப் பகுதி சிறப்புடைய தென்பதையும், ஆரிய அரசன் பிரகத் தனைத் தமிழ் அறிவித்தற்குவந்த கபிலர், களவுப்புணர்சி யைக்கூறும் குறிஞ்சிப் பாட்டைப் பாடியதும் இறையனார் அகப்பொருளில் நுதலிய பொருளைக் கூறும்போது இந்நூல் என்னுதலிற் றோவெனின் தமிழ்நுதலிய தென்பது' என் பதும், பொருளிலக்கணத்தைக் கூறும் ஒரு பழைய இலக்கண நூலுக்குத் 'தமிழ்நெறி விளக்கம்' என்னும் பெயரமைந்திருத்தலும் குறிப்பிக்கின்றன. 'இன் தமிழ் இயற்கை இன்பம் (சீவன 2063)என்பதும், 'இனிய தமிழ் கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய இன்பம்' (—நச்) என் னும் உரையும் தமிழுக்கும், களவுப்புணர்ச்சிக்குமுள்ள

தொடர்பை விளக்கும். 'சிறப்பினுற் பெயர்பெற்றது கள வியல் என்பது; என்னை? 'களவு, கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்'' (இறை: சூ 1-உரை) [பாடலின் பொருளும், பொருளின் நுட்பமும் நூலுள் காண்க]

களவொழுக்கம் சிறந்தது எனின், 'ஒழுக்கக்கேடு பெருகுதற்கு அஃது இடம் தாராதோ?' எனச் சிலர் ஐயுறுதல் கூடும் அவ்வையம் நேர்மையானதே. தமிழர் பண்பாட்டின் வரலாற்றை ஆராய்கின்ற நாம் இந்த ஐயத்தினைப்போக்கும் கடப்பாடுடையோம். இவ்வையத்திற்குரிய விடையினைச் சுருக்கமாகக் காண்போம். தமிழரின் களவொழுக்கமும், வடவரின் காந்தருவமும் ஒப்புடையனவேயன்றி, இரண்டும் ஒன்ருகா. இவ்விரண்டிடையுள்ள வேற்றுமையினை உரையாசிரியர்கள் குறித்துள்ளனர். காந்தர்வம் கற்பின்றியும் அமையும்-கற்பின்றிக் களவே இல்லை; எனவே, தமிழரின் களவொழுக்கத்தால் சமுதாயத்தில் ஒழுக்கக்கேடு நிலவுதலைத் தமிழ்ச் சான்ருேர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனுல், களவொழுக்கமே காந்தர்வமாகிக் கற்பு நிலை குலைந்து ஒழுக்கம் கெடுதற்கான வாய்ப்பு உண்டு என்பதைத் தமிழர் மறந்தவரல்லர். ஆங்காங்கே தவறுதல் நிகழ்ந்திருக்கவும் கூடும். புலனெறிவழக்கத்தில் இலட்சியத்தையே குறித்துச் சொல்வது ஏற்றுக்கொள்ளுவதற்குரியது எனினும் நடைமுறை வாழ்வில் புலனெறிவழக்கமே நிலவுமென எதிர்பார்க்கமுடியாது. ''நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' என்ற சூத்திரத்திலும் அதன் உரையிலும் நுண்ணிய இந்த வேறுபாட்டை ஆசிரியர்கள் புலப்படுத்தியுள்ளனர். வாழ்க்கையின் பெரும் போக்கில் தவறுகள் நேரிடக்கூடும் என்பதற்காக, வாழ்க்கையின் உரிமைச் சிறப்பைச் சான்ருேர் ஒழித்துவிட

மாட்டார்கள் உரிமைக்குச் சிறப்புத்தரும் அதே சமயத்தில் சமுதாயத்தின் சீர்மையையும் கருத்தில் கொள்ளுவர். இக் கருத்தின் ஆராய்ச்சியில் மேற்குறித்த சூத்திரமும் அதன் உரையும்,

"பொய்யும், வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்ற சூத்திரமும் இணைத்து நோக்குதற்குரியன. இவற்றின் இணைந்த நோக்கிலே உரிமைக்கும் கடமைக்கும், ஒழுங்குக்கும் ஒழுக்கத்திற்கும் தமிழ்ச் சான்றோர் மதிப்பளித்தனர் என்பது புலப்படும்.

குறுந்தொகைப் பாடல் ஒன்றில், "யாருமில்லைத் தானே கள்வன், தான் அது பொய்ப்பின் யான் எவன் செய்கோ?" என்று வரும் அடிகள் எண்ணிப்பார்த்தற்குரியன. களவொழுக்கத்தின் விளைவாகத் தலைவிக்குற்ற கவலைநிலையை இவ்வடிகள் தெளிவுறுத்துகின்றன. கொடுப்பாரும், அடுப்பாருமின்றித் தம்முள் தாமாகவே இயைதலால் விளையக்கூடிய கேட்டினை, இப்பாடல் புலப்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை. இத்தகைய அவலங்களைச் சங்கப் புலவர்கள் சுட்டும்போது தலைவன் தலைவியைக் கைவிடுத்துக் கடின்றதாக யாண்டும் குறிப்பிடுவதில்லை என்பது கருதுதற்குரியது. உரிமைக் காதலின் சிறப்பை விளக்குகின்ற அகப்பொருள் அந்நெறியில் உள்ள ஆபத்து எது என்பதையும் குறிப்பாகச் சுட்டி எச்சரிக்கிறதென்பதே நாம் கொள்ளவேண்டிய முடிபாகும்.

"மேற்குறித்த இடர்ப்பாடு இருப்பதால் களவொழுக்கத்தைக் கண்டிப்பதன்றோ சான்றோர்கள் செய்தற்குரியது' எனச் சிலர் வினவலாம். ஆனால், அவ்வாறு வினவுவோர் செம்மை வாடிக்கையின் நுட்பத்தினை நன்குபுரிந்துகொள்ள

வில்லை என்றே கொள்ளுதல் வேண்டும். ஒழுங்கு, ஒழுக்கம் என்ற பெயரால் சமுதாயத்திற்கு அஞ்சியோ, சான்ருண்மைக்கு ஏங்கியோ, செயலளவில் கெடாமல் வாழ்கின்ற பலருள்ளும், சிந்தையாலும், சொல்லாலும் சீர்கெட்டோரே பெரும்பான்மையோர் என்பதை நாம் கருதிப் பார்த்தல் வேண்டும். செய்ந்நன்றியறிதலாலோ, செம்மைநிலை கைவந்ததாலோ இன்னோரன்ன பிறவற்ருலோ சிந்தை, மொழி, செயல் ஆகிய மூன்ருலும், கற்புடையராக வாழ்வோர் உலகத்தில் சிலர் என்பதையும் நாம் கருதுதல் வேண்டும். பால் உணர்ச்சி உயிரினங்கள் கொண்டுள்ள 'இயல் பூக்கங்கள்' (instinct) யாவற்றிலும் மிகமிகப் பேராற்றல் கொண்டதென்பதும், அதனை வெல்ல வல்லார் வரலாற்றிலேயே மிகமிகச் சிலர் என்பதும் கருதுதற்குரிய குறிப்புக்களாம். செயலால் கெட்டவரே கெட்டார் என்று கொள்ளுதல் சரியான மதிப்பீடு ஆகாது என்பது யாவரும் அறிந்த ஒன்று. சிந்தை செம்மை நெறியில் நின்ருல், சொல்லும் செயலும் அவ்வாறே அமையும் என்பதில் ஐயமில்லை.

அகநானூற்றுப் பாடலொன்றில் வரும் நிகழ்ச்சி இங்கே நினைவு கூர்தற்குரியது. தலைவன் ஒருவன் மறுமணம் கொள்ள முடிவு செய்கிருன். மணவினைக்கான ஏற்பாடுகள் முடிந்து இன்னியங்கள் முழங்குகின்றன. மணமனையை நோக்கித் தலைவன் தன்தேரில் விரைகின்ருன். எங்கிருந்து வருகின்ருன் என்பது தெரியவில்லை; என்ருலும் அவன் தனக்குரிய வீட்டைக் கடந்து செல்கின்ருன் என்பது புலப்படுகின்றது. தேரின் மணியொலி வீட்டினுட் சென்று எட்டுகின்றது. தந்தையின் தேரொலி என்பதை உணர்ந்து கொண்ட பாலகன் தெருவுக்கு விரைகின்றனன். தன்னை நோக்கித் தெருவில் வருகின்ற மகனைப் பார்த்தபின் தேரைச் செலுத்தமுடியாமல் தலைவன் நிறுத்துகின்ருன். தேரை

விட்டு இறங்கி மகனைத் தூக்கிக்கொண்டு வீட்டினுட் செல்லுகின்றான். தன் சிறுவனால் தலைவனின் செலவு தடைப்பட்டதை அறிந்து, தலைவி ஒரு சிறு கோல் கொண்டு மகனை அடிக்க முற்படுகின்றாள். தன் அவலத்தையெல்லாம் மறைத்து, நிறைகொண்டு வாழும் அப்பெண்ணின் செயல் கண்ட தலைவன், சிந்தனையில் ஆழ்கின்றான். யாவரையும், யாவற்றையும் விட்டுவிட்டு இவனுக்கே உரியவளாக ''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்'' என்ற நெறிப்படி இவன் துணைவியாய், மனைக்கு விளக்காகிய அந்நல்லாளின் செம்மையெல்லாம் தலைவனின் சிந்தயிலே நிழலிடுகின்றன; செய்ந்நன்றி பொங்குகின்றது. மண இல்லத்தின்றும் இன்னியத்தின் ஓசை அலை அலையாக வருகின்றது. இவனை அழைப்பது போன்ற அந்த ஓசை வெற்றிபெறவில்லை. இக் கருத்தினைத் தன்னகத்துக் கொண்டு விளங்கும் பாடல் வருமாறு:

''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழியெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி!
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்தொழில் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி, 'நெடுந்தேர்
தாங்குமதி வலவ! என்று இழிந்தனன் தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்

புல்லி, 'பெரும! செல்இனி; அகத்து, எனக்
கோடிபோற்கு ஒல்லான் கலுழ்தலின், 'தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம்,' என மகனொடு
தானே புகு தந்தோனே; யான்அது படுத்தனென்
ஆகுதல் நாணி, இடித்து, 'இவற் கலக்கினன்
போலும் இக்கோடியோன்' எனச் சென்று
அலைக்கும் கோலோடு குறுக, தலைக்கொண்டு
இமிழ் கண் முழவின் இனசீர் அவர்மனைப்
பயிர்வன போலவந்து இசைப்பவும், தவிரான்
கழங்காடு ஆயத்து அன்றநம் அருளிய
பழங் கண்ணோட்டம் நலிய,
அழுங்கினன் அல்லனோ, அயர்ந்த தன்மணனே" (அகம் 66)

செல்லூர்க் கோசிகன் கண்ணனார் இயற்றிய இப்பாடல் சுவை நிறைந்த இலக்கிய ஓவியமாகமட்டும் அமையாமல், தமிழர்தம் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் நல்ல விளக்கம் தருகின்ற வரலாற்றுச் செய்தியாகவும் விளங்குகின்றது சங்க காலத்து ஆடவர் மறுமணம் செய்துகொள்கின்ற பழக்கமுடையார் என்பது வேறு பலபாட்டுக்களாலும் புலப்படுகின்றது, இப்பாடலும் அதனைச் சுட்டுகின்றது எனினும் அச்செய்தியைவிடச் சுவையும், பயனும் நிறைந்த ஒரு குறிப்பினைத் தன்னகத்துக் கொண்டு பொலிகின்றது. 'இமிழ்கண் முழவின் இன்சீர் அவர் மனைப் பயிர்வனபோல வந்திசைப்பவும் தவரான், கழங்காடு ஆயத்து அன்று நம் அருளிய பழங் கண்ணோட்டமும் நலிய அழுங்கினன் அல்லனோ அயர்ந்த தன்மனனே" என்ற இறுதி வரிகள் பொருட் சிறப்பு மிகவும் உடையன. மறுமண வினைக்குரிய இல்லிலிருந்து தலைவனை அழைப்பன போல வரும் இன்னிய ஓசை அலைகள் பயனற்றொழிந்தன என்பதையும் அதற்குரிய காரணத்தையும் இவ்

வரிகள் புலப்படுத்துகின்றன. கழங்காடும் துறையிலே ஆதி முதலில் கண்டு தலைவியைக் காதலித்த செய்தியும், அது காலை அவன் பெற்ற இன்பமும் அவளுக்கு அவன் செய்த தலையளியும் முதலான பல நிகழ்ச்சிகள் தலைவன் உள்ளத்தே நிழலிட்டன. அன்றைய தன் நிலையினையும், இன்று அவளை மறந்து துறந்து வேறொருத்தியைக்கைப்பிடிக்க முனைந்திருக்கும் நிலையினையும் தலைவனின் நெஞ்சம் ஒப்பிட்டுப்பார்க்கிறது. முன்னை நிலவிய கண்ணோட்டம் (தாட்சணியம்) செய்ந்நன்றி மறந்த நிலையினை அவனுக்கு எடுத்துக்காட்டித்துன்புறுத்தியது. அதன் விளைவாகக்கண்ணோட்டம் வென்றது, செய்ந்நன்றியுணர்வு மிக்கது; அறம் தழைத்தது.

இலக்கியத்தைப்பயில்கின்றவர்கள் அது நல்கும் காட்சியை மட்டிலும் காண்பது போதாது அக்காட்சியின் உள்ளுறையினை உய்துணர்தல் இன்றியமையாதது. இத்தகைய நோக்கொடு இலக்கியம் பயிலாவிடின் சீறிய பயன் ஏதும் விளையாது. இலக்கியச்சுவை நெறி ஒரு பால் இருக்க, இலக்கியவாயிலாக மன்பதையின் வாழ்க்கையினைக் கணித்தறிய முற படுகின்ற வரலாற்று மாணவர்கள் இலக்கியத்தின் புறத்தோற்ற அளவில் நின்று விடுதல் பயனற்றது. வரலாற்று நோக்கில் நுணுகிப்பார்க்குமிடத்து இப்பாடல் வெளிப்படக் கூறியது கொண்டு தன்னகத்துக் குறிப்பாகப் பொதிந்து வைத்துள்ள நுட்ப நாகரிகத்தினை நாம் உணர்தல் வேண்டும். மறு மணம் கொள்ளத்துணிந்த தலைவன் பழங் கண்ணோட்டம் நலிதலால் மறு மண நினைப்பை விடுக்கின்றான். இது பாடலின் தொடர்கள் தரும் காட்சி. ஆனால், புறத்தோற்றமாகிய இந்த அளவில் நாம் நிற்றற்கில்லை. மறு மணத்தை மேற் கொள்ள முனைந்து அம்முயற்சியின் கண் அவன்

கொண்ட விரைவும் தீவிரமும் கண நேரத்தில் மறைவதைக் காணுகின்றோம். இந்த ஆற்றல் பழைய நிகழ்ச்சியின் நினைவிற்கு எவ்வாறு வந்தது? இயற்கையின் ஆணை வழிபட்டுத் தம்முள் தாமாக இரண்டறக்கலந்த தூய காதலின் ஆற்றல் அப்பழைய நிகழ்ச்சியிலே செறிந்து கிடந்தது. அச்செறிவே நிகழச்சி பழமையான பின்னும் நினைப்பிற்குத்தீவிரம் ஊட்ட வல்லதாயிற்று. இத்தகைய பேராற்றல் களவு வழிப்பட்ட காதலுக்கு- இயற்கையாக அன்புடை நெஞ்சம் கலந்த காதலுக்கு— மிக மிக எளிதிலே வாய்ப்பதாகும். பெற்றோரும், பெரியோரும் 'இவனுக்கு இவள்' என்று தம்முள் முடிவு செய்து, அம்முடிவினை முன் அறியாத இருவரின் வாழ்க்கை முடிச்சாக ஆக்கிவிடுகின்ற 'பொம்மைக்கலியாணத்தில்' இவ்வன்பின் செறிவு அத்துணை எளிதிலே ஊற்றெடுத்துப் பெருகுதல் இல்லை. அங்கே செய்ந்நன்றியுணர்வு தழைப்பதும் அருமை; பெரியோர் வழிப்பட்ட திருமணங்கொண்ட தலைவனுயின் மறுமணம் தவிர்தலும் அருமையிலும் அருமை. இவ்விதிக்கு விலக்கு உண்டு என்றாலும், விலக்கு என்பது விலக்கே அன்றி விதியாகாது.

இப்பாடலில் புலப்படுகின்ற மற்றொரு கருத்தும் இங்கே நினைவு கூறுதற்குத்தகுதியுடையது. தேரொலிக்கேட்டுத்தெரு நோக்கி ஓடிவந்த மகன் வாயிலாகவே மறுமணத்தடை நிகழ்கின்றது. அம்மகனிடத்துத்தலைவன்காட்டுகின்ற பரிவு மிகவும் போற்றத்தக்கது. தலைவன் தலைவியரின் காதற் செழிப்பிலே பூத்த மலர் அந்தக்குழந்தை. ஆதலால்' கனவிலே மலர்ந்த அம்மலரை அன்பொடு மென்மை கொண்டு போற்றுதலைக் காண முடிகின்றது. 'பொம்மைக்கல்யாண' விளைச்சலில் இது காணுதற்கரியது என்பது சொல்லத்தேவையில்லை.

இது காறும் சொல்லியவற்றிலிருந்து களவு மணத்தால்

குறைகள் நிகழ வாய்ப்புண்டு எனினும், அதனைப்புலனறி வழக்க மாகச் சங்கத்துச் சான்றோர் ஏற்றுக்கொண்டமைக்குரிய காரணம் புலப்படும். சுருங்கச்சொல்லின், இயற்கையான கவர்ச்சிக்குச் சமுதாயத்தில் இடமிருக்குமாயின் வீட்டில் கனிவு குலுங்க நாட்டில் மகிழ்ச்சி நிலவும் என்று சான்றோர் கருதினராதல் வேண்டும். குறைகள் நிகழலாமாயினும் திருந்துதற்குரிய வாய்ப்பை நோக்கும்போது இயற்கைக் கவர்ச்சிக்கு இடம் தருவதே மன்புதைக்கு நலம் என்பது பண்டைத்தமிழர் கருத்து.

இயற்கைக் கவர்ச்சி என்பது விலங்குணர்ச்சிபோல் வெறியாக அமைந்து விடுவதைப் புலனெறி வழக்கமோ, அல்லது சங்ககாலச்சமுதாயமோ ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கருத்தைப் புலப்படுத்துகின்ற மரபினை நாம் உணர்தல் வேண்டும். அகப்பொருள் நுதலியதிணையினை அன்பின் ஐந்திணை என்று குறித்தமை கருதுதற்குரியது. மேலும், அகப்பொருள் இலக்கியம் ஒன்றின் பெயர் நற்றிணை என அமைந்தமையும் கருதுதற்குரியது.

இற்றைநாளில் அமெரிக்கா முதலிய மேலை நாடுகளில் செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் கலக்கின்ற காதலுக்கு இடம் உண்டு. ஆதலால், மேலைத்திரைச் சமுதாயத்தைச் சங்ககாலச் சமுதாயத்திற்கு நிகர் எனக் கூறலாமோ?

சங்க காலக் காதல் வாழ்வும் மேலை நாட்டுக் காதல் உரிமையும் தோற்றத்தால் ஒன்று போலவே காணப்படினும், அடிப்படையில் பெரிதும் வேறுபாடு உடையவை. சங்க இலக்கியத்தின் புல னெறி வழக்கம் அவனில் அவளும் அவளில் அவனும் கரந்து கரைகின்ற தன்மையை வற்புறுத்துவதாகும். மேற் குறித்த செம்புலப் பெயல் நீராரின் பாடல் மட்டுமன்றி,

'இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெங் கணவனை
யானு கியர்நின் நெஞ்சுநேர் பவளே'

என்ற பாடலும் இவை போல்வன பிறவும் இக்கருத்தினை வலி யுறுத்த வல்லன. குறிப்பாக, பொருள்வயிற் பிரிவு அமை கின்ற இடத்தி லெல்லாம் தலைவன் தலைவியரிடையே நிலவு கின்ற பரிவு மிகத் தெளிவாக விளங்கும்.

"பொருளே காதலர் காதல், அருளே
காதல் என்றி நீயே"

என்பது போன்ற உறையாடல்கள் மிகப்பல இடங்களில் சங்க இலக்கியத்துட் காணப்படுகின்றன. எதிர் மறை வகையால் தலை வனின் காதலை இவை வற்புறுத்துவன, 'செலவிடை அழுங்கல்' என்னும் துறைப்பட அமைகின்ற பாடல்களெல்லாம் கடமைக் கும் குறுக்கே காதல் நிற்பதைச் சங்க இலக்கியம் சுட்டு கின்றது.

தலைவியைப் பிரிந்துவந்த வன் கண்மையை நினைந்து தலை வன் வழியிடையே வருத்துவதும், முன் கூட்டியே திட்டத்தை உறுதியாகச் சொல்லாமல் இறுதியிற் பொருள்வயிற் பிரிந்த தலை வனை நினைந்து தலைவி வாடுவதும் சங்க காலத்துக் காதலரிடையே பொருளுக்கிருந்த மதிப்பைப் புலப்படுத்துகின்றன உலகியல் வாழ்விற்கு இன்றியமையாத பொருளைச் சேர்த்தாலும் செயற் பாடும் தவிர்க்க முடியாதவை. ஆனால், பொருளினும் வினையி னும் சிறந்ததாகப் பொன்ருக்காதலையே போற்றினர் தமிழ்ச் சான்ரோர்.

"வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்,
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென,
நமக்கு உரைத்தோரும் தாமே"

என்ற வரிகள் காதலரிடையே பொருளுக்கிருந்த மதிப்பைப் புலப்படுத்துகின்றன. ஆயினும், நூற்றுக் கணக்கான பாடல்கள் 'பொருளினும் அருளே பெரிது' என்ற கோட்பாட்டினை அகத் துறையில் வைத்து விளக்குவது சங்க இலக்கியப் பாங்கு.

ஆனால், மேலை நாட்டுக் 'காதல் உரிமை', அருளை அடிப் படையாகக் கொண்டதென்று சொல்ல முடியவில்லை. அவ்வாழ் வைக் காதல் உரிமை என்பதைவிடக் 'கவர்ச்சி உரிமை' என்று சொல்லுதல் மிகவும் பொருந்தும். அக்கவர்ச்சி உரிமை காதற் செல்வமாக மாறக்கூடாதென்பதில்லை; மாறவும் கூடும், ஆனால், உலகியற் சூறாவளியில் பொருள்நசை என்னும் சூழலில் வசதி யான வாழ்க்கை எனும் வேட்கை நெருக்கில் முழு நாட்டங் கொண்டு வெறி கொண்ட வேகத்தில் விரைவது மேலைத்திசை நாகரிகம். தன்னல மறுப்புக்கும் அன்புடை நெஞ்சிற் கரைவ தற்கும் அந்நாகரிகத்தில் பெரும்பாலும் இடமில்லை. ஆதலால், மனக்கவர்ச்சி வழிப்பட்ட மனப்பிணைப்பு, மனப் பிணக்காக மாறுவதைக் காணுகிறோம். அப்பிணக்கு மண விலக்கிலே முடி கின்றது. பொருள் என்பது வசதிக்கும் வாழ்வின் மதிப்பிற்கும் உரியது என்பதை மறந்து,

கேள்கேடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
பெறலரும் நன்கலம் எய்தி......(அகம். 93)

என்ற பாடலிற் குறிப்பிடுவது போல அருள்வளர்க்கவே பொரு

வீட்டுவது என்ற குறிக்கோள் வேண்டும். அதே பாடலில் தலைவியோடு தான் வாழ நினைக்கும் இன்ப வாழ்க்கையைப் பற்றிய திட்டமும் பேசப்படுகின்றதென்றாலும் தான் பொருள் சேர்ப்பது தன் இன்ப வாழ்க்கைக்காகவே என்று சொல்லாமல், கேளிர்க்கு உதவவும், நொதுமலாளரைக்கேளிர் ஆக்கவுமே என்று சொல்லும் தலைவனின் கூற்று கருதுதற்குரியது. இதே போன்ற ஒரு காட்சி கபிலரின் குறிஞ்சிப்பாட்டிலும் அமைந்துள்ளது. அருள் வாழ்விற்கே பொருள் என்ற நாட்டத்தைக் கொள்ளாமல், பொருளுக்காகவே பொருள் என்ற நெறியில் மேலை நாகரிகம் அமைந்திருப்பதால், மனங் கரைந்த காதலுக்கு இடம் இல்லை. அங்கு மண வாழ்வு என்பது வாழ்க்கை வசதிகளிலே ஒன்று. அவ்வசதியில் குறை ஏற்படுமாயின் அவ்வசதிக்கு ஏற்ற வேறு இடத்தைத் தேடிக்கொள்ள வழி தருவது அந்தச் சமுதாயம்.

ஆரியரின் காந்தருவம் கற்பின்றி அமையவும் கூடும்; தமிழரின் களவொழுக்கம் அஃதின்றி அமையவே அமையாது— இவ்வேறுபாடு போலவே மேற்குத் திசையின் கவர்ச்சிக்காதலுக்கும், சங்க இலக்கியத்தின் அகன் ஐந்திணைக் காதலுக்கும் வேற்றுமை உண்டு அவளிலே அவன் கரைந்து அருளுக்கே பொருளீட்டும் தலைவனைக் கொண்டது அகனைந்திணைக் காதல்; தன்னிலே தான் திளைத்துப் பொருளுக்கே பொருள் என வாழ்வது மேலை நாட்டுக் கவர்ச்சிக்காதல். வேறு வகையில் சொன்னால், எவரையும் எவரும் காதலிக்கும் உரிமை இரண்டிடத்தும் காணப்படினும்—சங்ககாலக்காதல் தன்னல மறுப்பது என்பதும், மேலைத்திசைக் காதல் தன்னலத்தில் திளைப்பது என்பதும் நினைவு கொள்ளத் தக்கன. எனவே, அடிப்படையிலே வேற்

றுமை கொண்டிருக்கின்ற சங்க காலச் சமுதாயத்தையும் மேலை நாட்டுச் சமுதாயத்தையும் ஒரு நிகராகக் கொள்ளுதல் கூடாது.

ஈண்டு ஓர் எச்சரிக்கை தருதல் வேண்டும். இற்றை நாள் மேலைச்சமுதாயத்தில் உண்மைக்காதல் இல்லை யென்றும், சங்ககாலச் சமுதாயத்தில் பொய்ம்மைச் சூழலே இருந்ததில்லை யென்றும் நாம் கொள்ளவில்லை. மேலே கூறிய விளக்கமெல்லாம் பொதுமை பற்றியே யன்றி, விலக்குப்பற்றி யன்று.

## வெற்றிவேல் முருகன்

(கி. பழநியப்பன்)

தோகைமேல் ஏறிவரும் சோலைவாழ் வேலவனே!
வாகையாம் வாழ்வுதர வாராயோ-தோகையர்
வள்ளிதெய்வ யானையும் வாழ்த்தவே தந்திடுவாய்
தெள்ளுதமிழ்ச் சொல்லில் தெளிவு.

—பழமுதிர்சோலையிலிருந்து

# இருந்தும் இல்லவர்

——*●*——

( மதுரைக் குமரன் )

மாசூர் எனும் சிறு புகைவண்டி நிலையில் ஒரு நாள் மாலை இரயில் ஒன்று வந்து நின்றது. நன்கு உடை தரித்த மூன்று சிறுவர்கள் அதிலிருந்து இறங்கினர். யாரையோ எதிர் பார்ப்பதுபோல் அங்குமிங்கும் பார்த்தார்கள். அறிமுகமானவர் கள் ஒருவரும் காணப்படவில்லை. அவர்களுக்கு அவ்வூர் புதிது; போக வேண்டிய இடம் சில மைல்களுக்கு அப்பால் இருக்கின் றது என்பது மட்டுமே அவர்களுக்குத்தெரியும். என்ன செய்வது என்று திகைத்து நின்றனர். முடிவில் நிலைய அதிபர் உதவியை நாடினர். தங்களை அழைத்துச்செல்ல தந்தை வருவார் என்று எதிர்பார்த்ததாகவும், அவர் வராததால் தாங்கள் திகைப்புற்றி ருப்பதையும் கூறினர். நிலைய அதிபர் சிறுவர்கள் போக வேண் டிய இடத்தைக்கேட்டு, ஒரு மாட்டு வண்டிக்காரனை அழைத்து வாடகை பேசி அவர்களைக் கொண்டு போய் வீடு சேர்க்கச் சொன்னார்.

மூன்று சிறுவர்களையும் ஏற்றிக் கொண்டு கிராமத்தை நோக்கி வண்டி சென்றது. சிறிது தூரம் சென்றவுடன் வண்டிக் காரன், அவர்களுக்கே ஏற்பட்ட தனிமுறையில், சிறுவர்களுடன் பேசத்தொடங்கினான். அவர்கள் எந்த ஊர், யார், யார் வீட்டிற் குச்செல்கின்றார்கள் என்பதைக்கேட்டவுடன், ஆவேசம் பிடித்த வன் போல் திடீரென்று வண்டியிலிருந்து கீழே குதித்தான். மாட்டை அவிழ்த்தான். வண்டியைப்பின்புறமாகத்தூக்கி விட் டான். உள்ளே இருந்த சிறுவர்கள் மூட்டை முடிச்சுகளுடன் உருண்டு கீழே விழுந்தனர். அத்துடன் நிற்காமல் வண்டிக்கா ரன் பைத்தியம் பிடித்தவன் போன்றுக் கூச்சல் போட்டுக் கொண்டு கீழே விழுந்த சிறுவர்களை அடிக்கவும் முனைந்து

நின்ருன். ஒன்றும் புரியாது சிறுவர்கள் நடுக்கத்துடன் நின்றனர். தான் உயர் சாதிக்காரனென்றும் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த அவர்கள் தம் வண்டியில் ஏறித் தன்னையும், மாட்டையும் வண்டியையும் தீட்டாக்கி விட்டார்களே என்றும் கூச்சலிட்டான். மனம் வந்தவாறெல்லாம் திட்டினன். சிறுவர்கள் ஒருவாறு நிலைமையைப் புரிந்துகொண்டு அவனைச் சமாதானப்படுத்த முயன்றனர். வெறும் வாய்ச் சொற்களால் அவன் திருப்தியடைவதாகத் தெரியவில்லை. முடிவில் பேசிய வாடகையை இரட்டித்துக் கொடுப்பதாகக் கூறியவுடன்தான் அவன் திருப்தியடைந்தான். வண்டியில் மாட்டைப் பூட்டி அவர்கள் கையில் கொடுத்து அவர்களையே எப்படியாவது ஓட்டி வாருங்கள் என்று கூறி விட்டு, அவன் வண்டியின் முன்னல்—தீட்டுப் படாத தூரத்தில்—நடந்து சென்ருன். வழியில் அவர்களுக்கு ஒரு மடக்குத் தண்ணீரும் கொடுக்க ஒருவரும் முன் வர வில்லை. தீண்டப் படாதவர்கள் என்று தெரிந்தவுடன் ''போ! போ!'' என விரட்டி விட்டனர். இரவு வெகு நேரம்கழித்து வீடு சென்ற பின்தான் அவர்கள் தாகம் தீர்ந்தது. அவர்கள் இறங்கியவுடன் வண்டிக்காரன் வண்டியைக் கழுவி, மாட்டையும் குளிப்பாட்டித் தானும் குழுத்த பின்பே வண்டியில் ஏறி ஓட்டிச் சென்ருன்.

இம் மூன்று சிறுவர்களில் ஒருவன் படிக்கும் பள்ளியில் ஒரு நாள் ஆசிரியர் அவனை அழைத்துக் கரும்பலகையில் ஒரு கணக்கை எழுதச் சொன்ஞர். பையனும் எழுந்து பலகையின் அருகே சென்ருன். அவ்வளவு தான், வகுப்பில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. மாணவர்கள் ஒருவரை யொருவர் தள்ளி முட்டிக்கொண்டு, கரும்பலகைக்குப் பின் வைக்கப்பெற்றிருந்த, அவரவர்கள் உணவுப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினர். கரும்பலகையில் எழுதச் சென்றவன் தீண்டப்படாத வனுகையால் அங்குள்ள அவர்கள் உணவு தீட்டுப்பட்டுவிடும்

என்பது மாணவர்கள் எண்ணம்: அச்சிறு நிகழ்ச்சி கிராமத்திலேயே ஒரு புயலை ஏற்படுத்திவிட்டது. பெற்ருேர்கள் ஒன்று கூடி ஆசிரியரின் தகாத செயலை வன்மையாகக் கண்டித்தனர்.

அத் தீண்டப்படாத சிறுவன் படிப்பில் மிகத்திறமை சாலியாக விளங்கினுன். அதைக் கண்டு பரோடா மன்னர் அவன் மேல் படிப்பிற்கு வேண்டிய பொருளுதவி செய்து அவனை ஒரு முதல் தரப் பட்டதாரியாக்கினுர். வெளி நாட்டிற்குச் சென்று படிக்கவும் உதவினுர். மேலும் அவன் திரும்பி வந்ததும் தன்னுடைய ஆட்சியில் படைச்செயலாளராகப் பதவி ஏற்கச் செய்தார். படைச் செயலாளராக விளங்கினுலும் அவருடைய அலுவலகத்தில் அவரை மதிப்பார் ஒருவருவமில்லை. அவர் ஏவலைச் செய்யயும் பணியாட்களும் அவரை ஒரு தொழு நோயாளியைப் போல் நடத்தினர். அவருடைய மேசையைத்தொடுவதும் தீட்டென்று கருதிக்காகிதங்களைத் தூரத்திலிருந்தே மேசையின் மேல் எறிவார்கள். அவர். தன் அலுவலகக் கட்டிடத்திற்குள் நுழையும் பொழுதும் வெளியேறும் பொழுதும் நடை பாதையில் விரித்திருக்கும். மிதி பாயைச் சுருட்டி வைத்து விடுவார்கள். அவர் கால் படுமாயின் பாய் தீட்டுப் பட்டு விடும் என்பது அவர்கள் கருத்து. அவ்வூரில் அவர் குடியிருக்க ஒருவரும் வீடு கொடுக்க முன் வர வில்லை. முகமதியர்கள் கூட வீடு கொடுக்க மறுத்தனர். சில இரவுகள் வெட்ட வெளியிலும் மரத்தடியிலும் தங்க வேண்டி யிருந்தது வேறு வழியின்றித் தன் பதவியை விட்டுப் பம்பாய் வந்து சேர்ந்தார்.

இத்தகைய அல்லல்களுக்குள்ளானவர் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டமும், விஞ்ஞான டாக்டர் பட்டமும், தத்துவ ஞானத்தில் அமெரிக்க டாக்டர் பட்டமும் பெற்ற அறிஞரான டாக்டர் அம்பேத்காரே யாவார். தனக்கே இந்நிலை யென்ருல் எழுதப்படிக்கத் தெரியாத நாட்டிலுள்ள கோடிக்கணக்கான தீண்டப்படாதவர்கள் நிலை எப்படி இருக்குமென்று கவலை கொண்

டார். அன்று முதல் அவர்கள் முன்னேற்றத்திற்கே பாடுபடுவ தென்று உறுதி கொண்டார். அல்லும் பகலும் ஊக்கத்துடன் உழைத்தார்.

"ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

என்ற வள்ளுவர் வாக்கின்படி அவருடைய உழைப்பு அவருடைய இனத்திற்கும் அவருக்கும் உயர்வைக் கொடுத்தன. அவருடைய அறிவு ஆற்றலை இந்தியமக்களும் அரசியல் தலைவர்களும் உணர்ந்தனர். இந்திய அரசிலும், பம்பாய் அரசிலும் அமைச்சர் பதவிகள் அவரைநாடி வந்தன.

1947 ஆகஸ்டு 15-ல் இந்தியா விடுதலைபெற்றதும் அரசியல் அமைப்பு மன்றம், நாட்டிற்கு ஓர் அரசியல் அமைப்புச்சட்டத் தைத்தயாரிக்க ஒரு குழு அமைத்தது. எழுவர்கொண்ட அக்குழு விற்குத் தீண்டப்படாத டாக்டர் அம்பேத்காரே தலைவராக இருந்தார். பின் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட மந்திரியு மானுர்.

இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியதில் டாக்டர் அம்பேத்காரின் பங்கு என்ன என்பதைப் அரசியல் அமைப்பு மன்றத்தில் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் நன்கு விளக் கினுர்.

"கனம் உறுப்பினர்கள் அரசியல் சட்ட அமைப்பைப்பற்றி அறிவார்கள். குழுவில் ஏழு உறுப்பினர்கள். அதில் ஒருவர் விலகிக் கொண்டார். அவருக்குப் பதிலாக ஒருவரும் நியமிக்கப் படவில்லை. ஒரு உறுப்பினர் இறந்துவிட்டார். அந்த இடமும் காலியாகவே இருந்தது. ஒருவர் அமெரிக்காவிற்குச் சென்று விட்டார். ஒருவருக்கு அரசாங்க அலுவல்கள் அதிகமாக இருந்

தன. இருவர் டில்லியிலிருந்து வெகு தூரத்திலிருந்ததுடன் உடல் நலம் குன்றியவர்களாகவும் இருந்தார்கள். இதன் முடிவு என்ன வென்ருல் அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் முழுப் பொறுப்பும் டாக்டர் அம்பேத்கார் ஒருவரே ஏற்க வேண்டியதாக இருந்தது. பல கூட்டங்களில் அவரும் அவர் செயலாளர் மட்டுமே இருந்திருக்கின்றனர். எல்லோரும் பாராட்டும் வகையில் இவ்வரிய பணியைச் செய்து முடித்த டாக்டர் அம்பேத்காருக்கு நாம் மிகவும் கடமைப் பட்டுள்ளோம்.''

காலத்தின் போக்கால் ஏற்படும் பல மாறுதல்களில் இது மிகவும் வியக்கத் தக்க தொன்ருகும். எந்த நீதியின் படி அவரும் கோடிக்கணக்கான அவர் இனத்தினரும் தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டார்களோ அந்த நியதி நூலாகிய மனுசிமிருதியைப்பொதுமேடையில், சில ஆண்டு களுக்கு முன், கொளுத்தியவர் அம்பேத்கார். எந்த நாட்டில் அவர் தீண்டப் படாதவர் என்று கருதப்பட்டாரோ அந்த நாட்டிற்கே அவர் ஓர் அரசியல் அமைப்பைத் தயாரிக்கும் நிலை ஏற்பட்டது. எந்த மதத்தின் பெயரால் அவர் தாழ்த்தப்பட்டவராகவும், தீண்டப்படாதவராகவும் கருதப்பட்டாரோ அந்த மதத்திற்கே ஓர் சிறந்த சட்டத் தொகுப்பைத் தயாரிக்கும் நிலை அவருக்கே ஏற்பட்டது பிறப்பால் கீழ்ப்படியிலிருந்த அவரைப் பிறப்பால் மேல் படியைச் சேர்ந்த ஓர் அம்மையார் கணவனுக ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

அம்பேத்காரின் அருஞ்செயல்களைக்கண்டு அவரை நவீன மனு என்றுமக்கள் அழைத்தார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தங்கப் பேழையில் வைத்து அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அரசியல் அமைப்பைத் தயாரித்ததிற்காக அமெரிக்கக் கொலம்பியா பல்கலைக்கழகம் அவருக்குச்

சட்டத்துறையில் டாக்டர் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. சமூக அமைப்பில் கீழ்ப்படியிலிருந்த அம்பேத்கார் தன்னுடைய அறிவினுலும் ஆற்றலினுலும் இவ்வாறு மேல் படியை அடைந்தார். மேலிருப்போர் சிறுமை உடையராயின் கீழாவார். கீழிருப்போர் பெருமையுடையராயின் மேலாவார். எல்லா உயிருக்கும் பிறப்பு ஒக்கும். வேற்றுமை கொடுப்பது அவரவர்கள் செய்கையே யாகும் என்பதே வள்ளுவர் கருத்தாகும்.

**தீட்டிட்டார் அம்பேத்கார் தீண்டாரே ஆயினும்**
**நாட்டிற்கோர் சட்டமெனில், நாடறியக்**
**—காட்டிட்டார்**

**மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்**
**கீழல்லார் கீழல் லவர்.**

—*●*—

## நன்மை தருவார் யார் ?

நன்மை தருவார்யார் நன்மைதரு வார்நெஞ்சே
நன்மைதரு வாரையே நாடென்றேன்—நன்மை
தருவார் வருவார் தரமறிவார் நன்மை
தருவாரே இம்மையிலே தான்.

—அன்பு. கருணையானந்தா.

# ஆடலும், பாடலும்

பேராசிரியர்.

அ. மு. பரமசிவானந்தம்,

எம். ஏ., எம். லிட்.

மக்கள் மட்டுமின்றி உலகில் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கும் காலத்து ஆடிப் பாடி இன்புறுவதுண்டு, ஆடுவதும் பாடுவதும் இன்ப உள்ளத்தின் எதிரொலி. துன்பத்திலும் சில சமயங்களில் பாடல் தோன்றும். உள்ளத்தே உண்டாகும் நெகிழ்வினை-உணர்வினை வெளிக்குக் காட்டும் வகையிலே அமைவன ஆடலும் பாடலும்.

செல்வர் மட்டுமன்றி வறியரும், இளைஞர் மட்டுமன்றி யாவரும் மக்கள் மட்டுமன்றி மற்றைய உயிர்களும் இந்த ஆடலிலும் பாடலிலும் தம்மை இழப்பது உலகியற்கை. ஆடலும் பாடலும் உலகம் உண்டாய அன்று தொட்டு-அறிவு நிலை திருந்தப் பெறாத அந்தக் காலத்திலேயும் போற்றப்பட்டு வந்தன ஆடலும் பாடலும் ஒன்றற்கொன்று இயைபுடையன. ஒன்று இன்றேல் மற்றொன்று சிறந்ததாகாது. ஒன்று பொலிவிழந்த தாயின் மற்றொன்றும் குறைவுறும். பண் என்றப் பாட்டிசைக்க அப்-பாட்டின் இசைக்கும், தாளத்திற்கும் ஏற்ப அமைவது ஆடலாம். இராகமும், தாளமும், இசையும், அளவும் பாடலை ஆக்குகின்றன. அவற்றுடன் பாவம் சேர்ந்தால் ஆடலாகின்றது. இதையே பரத நூலாசிரியர்

'பாவமோடிராகம் தாளம் இம்மூன்றும்
பகர்வதால் பரதம் என்றுரைப்பர்'

என்று பாடிப் போனார்.

தமிழ் நாட்டில் மிகப்பழங்காலம் தொட்டு இந்த ஆடல்

பாடல் இரண்டும் போற்றப்பட்டு வந்தன. இயற்கை வழியே வாழ்வு நடத்திய தமிழ்மக்கள் இந்த இரண்டையும்-ஆடலையும் பாடலையும்–இனிய முறையில் இயற்கை நலத்துடன் போற்றிப் புரந்தனர் ஆடவரும் பெண்டிரும் கைகலந்து ஆடியும் பாடியும் தம் பொழுதைக் கழிக்கும் முறை நன்கு கையாளப்பட்டு வந்தது. சங்ககால இலக்கியங்களிலே பாணன் பாடினி என்பார். புரவலர்களைக் காணச் செல்லுங்கால் ஆடியும் பாடியும் அசைந்தும் சென்றனர் என்பதைக் காண்கிறோம். தாம் ஆடலிலும் பாடலிலும் மகிழ்ந்து சென்றது மட்டு மன்றி இயற்கைப் பொருள்களும்-பிற உயிருள்ளனவும் கூட அந்த ஆடல் பாடலில் அழகுற்று விளங்கின என்று கூறுகின்றார்கள்.

கபிலர் தினைப் புனத்தைக் காண்கின்றார். தினை உண்ணக் குருவிகள் சேர்ந்து வருகின்றன. மயில் அங்கே அசைந்து வருகிறது. அதைக் கண்ட குருவிகள் தத்தித் தத்திப் பறக்கின்றன. அந்தக்குருவிகள் பந்துபோலவும், மயில் பந்தாடும் மகளைப் போலவும் காட்சி அளிக்கின்றது. புலவன் கபிலனுக்கு,

‘மஞ்ஞை,
இருவி இருந்த குருவி வருந்துறப்
பந்தாடு மகளிின் படர்தரும் குன்று’

என்று புகழ்கின்றார்.

காவிரிக்கரையில் தங்குகிறார் காவியம் தந்த இளங்கோவடிகள். அழகுறப் பெரு வெள்ளம் அலை கொழித்துச் செல்கிறது. அருகிலுள்ள சோலையில் மயில் அகவ, குயில் கூவ அசைந்தசைந்து செல்லும் காவிரியின் காட்சி அடிகள் நெஞ்சைப் பிணிக்கின்றது.

'பூவார் சோலை மயிலால புரிந்து குயில்கள்
இசை பாட
காமர் மாலை அருகசைய நடந்தாய்
வாழி காவேரி'

என்று மயில் ஆடலும் குயில் பாடலும் கலக்கக் காவேரி அசைந்தாடி அழகுறச் செல்கிருள் எனப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்,

ஏழாம் நூற்ருண்டிலே வாழ்ந்தவர் குழந்தைஞான சம்பந்தர். ஊர்தோறும் சென்று இறைவனைப் பாடிப்பரவும் முறையிலே பல பாடல்களைப்பாடியுள்ளார்அவர். அவை தேவாரமாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. அவர்தம் பாடலிலே ஆடலும் பாடலும் அழகுற விளக்கப்பட்டுள்ளன. ஆண்டவனை வணங்கும் அடியவர் கூட ஆடலையும் பாடலையும் விட்டார் இல்லை. 'ஆடிப்பாடி' அண்ணு மலை அடைந்தார். என்று கூறியுள்ளார் அவர். மக்கள் மட்டுமன் றிப் பிற இயற்கை எழில்களும் இவ்வாடல் பாடல்களில் வளமுற் றன என்பதை அவர் தம் சொல் கொண்டே காணலாம்.

"காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண் பாடக் கவினுர் வீதித்
தேந்தேமென் றரங் கேறிச் சேயிழையார்
நடம்பயிலும் திருவையாறே"

என்று ஒரு சார் மகளிர் பண்ணென்றைப் பாட்டிசைக்க, மற்ருெரு சார் அரங்கத்தே அழகுற நடமாடும் மகளின் காட்சி நன்கு சிறப்பதை விளக்கினுர்.

"வரை சேரும் முகில் முழவ மயில்கள்
நடமாட வண்டு பாட

விரைசேர் பொன் இதழிதர மென்காந்தல்
கையேற்கு மிழலையாமே',

என்ற இயற்கை ஆடலைக் காணும்போது அவர் பிள்ளையுள்ளம் துள்ளி எழுந்தது. மலைமீதிருந்த மேகம் முழவாக முழங்க, வண்டுகள் பாட, மயில்கள் நடமாடின. அந்த நடன-ஆடல் எழிலைக் கண்டு பொன் பரிசு தந்தன அருகிலுள்ள சுரபுன்னை மரங்கள். அதை ஏற்றன காந்தளாகிய கைகள். ஆம்! இவை சாதாரண இயற்கை ஓவியம் தான். ஆனால் இத்தகைய இயற்கை ஓவியப் பாடல்கள் நாட்டின் சிறப்பை நன்கு விளக்கும் பாடல்களாக அமைகின்றன அன்றோ!

சம்பந்தர் காலத்திற்குப் பின் வாழ்ந்த புலவர்கள் பலர் அவர்கள் அனைவரும் ஆடலையும் பாடலையும் இணைத்தே பாடியுள்ளார்கள். இறுதியாக வாழ்ந்து மறைந்த சுதந்திரப் புலவன் பாரதி கூட பெற்ற சுதந்திரத்தை ஆடல் பாடல்களாலேயே போற்றல் வேண்டும் என்றான்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த
சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று ஆடுவோமே"

என்றான்.

எனவே, தமிழ் நாட்டு இலக்கியம் அறிந்த நாள் தொட்டு இன்று வரை ஆடலும் பாடலும் இயைந்தே வருகின்றன. மக்கள் ஆடல் பாடலில் ஆற்றிய திறன் நன்கு விளக்கப்படுகிறது. மக்கள் உள்ளம் இந்த இரண்டிலும் இயைந்து நின்றமை நன்கு வெளிப்படுகின்றது இன்னும் நாட்டில்-வாழ்

வில்–இசை முழங்கக் கேட்கிறோம்; மகிழ்வில் நடம் பயிலக் காண்கின்றோம்.

ஆனால், தமிழ் நாட்டில் இன்று, அன்று புலவர் கண்ட அளவுக்கு ஆடலும் பாடலும் அமையவில்லை என்பது உறுதி. தெரு வெல்லாம் அரங்கங்கள்! தெரிவையர் நாடகசாலைகள்! சேயிழை யார் பாடல்கள்! தினம் தினம் ''பாடல் முழவும் குழலும் இயம் பப் பணைத் தோளியர் பாடலோடு ஆடல் அருக்'' காட்சிகள், அன்று தமிழ் நாட்டில் சிறந்த காட்சிகளாக அமைந்தன. இன்று அந்த அளவிலே இல்லை.

நாம் முதலில் காட்டியபடி உள்ள மகிழ்ச்சியின் விளைவே பாடலும் ஆடலும் ஆகும். நாட்டில் உள்ள மகிழ்ச்சிக்கு வேண்டிய அளவு நலன்கள் இல்லை. உள்ளம் மகிழ்வதற்கு வேண்டிய உற்ற சூழ் நிலை இல்லை. அனைத்திலும் அடிமையா கிக் கிடக்கிறான் தமிழன். கலையில் அடிமை- மொழியில் அடிமை -வாழ்வில் அடிமை-வளம் பெருக்குவதில் அடிமை! இந்தச் நிலை யில் அவன் உள்ளம் மகிழ்வது எங்கே? மகிழ்வில் பிறக்கும் ஆட லும் பாடலும் அமைவது எங்கே?

மற்றும் தமிழ் நாட்டில் தமிழ்ப் பாடல் பாடுவது இழி-வென்று எண்ணிய காலம் இருந்தது. பிற பாடல்களைப் பாடிப் பொருள் அறியா நிலையில் ஆடல் சிறப்ப தெங்கே? ஆகவே இடைக்-காலத்தே பிற பாடல்களைப் பாட வேண்டும் என்று எழுந்த போலி எண்ணத்தால், ஒன்றை ஒன்று பற்றி வாழ்கின்ற ஆடலும் பாடலும் வளங்குன்றின. எனினும் இன்றைய விழிப் புற்ற தமிழகத்தே-தமிழிசை தழைத்தோங்கும். இந்த நாளிலே நாட்டிலே ஆடலும் பாடலும் நனி சிறக்கும் என எதிர்ப் பார்க்கலாம்.

ஒரு நாட்டு ஆடலும் பாடலும் சிறக்க வேண்டுமானுல், அதற்கு அந்நாட்டு அரசியலார் ஆவன செய்ய வேண்டும். நாட்டின் ஆடலும் பாடலும் அழகுற அமையும் முறை கண்டே அந்நாட்டு அரசனது திறன்-அறிவு-வளமை அனைத்தையும் அறுதியிட்டுக் கூறலாம். தமிழ் நாட்டு அரசர் அன்று இத்தகைய கலை நலன்களை ஓம்பி வந்ததனுலேயே அவை எல்லாம் வளர்ந்தன கலையின் நலன் கண்டே, ஆண்ட மன்னர்தம் மன நலனை மதிப்பிட இயலும். மதிப்பிட்டார் இளங்கோவடிகள்! இதோ அவர் அடிகள்:

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்து
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!',

காவேரியை ஒரு பெண்ணுகக் காண்கின்ருர்; மணிப்பூவாடை போர்த்த பெண்ணுகக் காண்கின்ருர். வண்டு பாட, இம் மங்கை நல்லாள் கயல் விழி பிறழ, நடம் புரிந்து செல்கிருள். அவள் அவ்வாறு செவ்வதால் அவள் தலைவன்-அந்நாட்டு அரசன்-சோழன் செங்கோல் செய்விதாக உள்ளதை அறிந்தேன் என்கிருர். எனவே, நாட்டு அரசன், நலம் புரப்பவனுக இருப்பின் அவன் நாட்டிலே கலை மணம் கமழும். ஆடலும் பாடலும் அழகுற மிளிரும். இன்றைய தமிழ் நாட்டில் ஆடலும் பாடலும்

போற்ற வேண்டிய அளவுக்குப் போற்றப் படாதிருப்பதற்குக் காரணம் இது வரை இருந்த அந்நிய அரசியலேயாகும்.

நல்ல வேளையாக இன்று நம்மை நாமே ஆளுகிறோம் என்று பேசுகிறோம். சென்னை அரசியலார்-தமிழ்நாட்டு அரசியலார் ஊர்தோறும், நாடுதோறும் தமிழ் இசை-தமிழர் தம் ஆடல் பாடல் இடையறாது நடைபெறத்தக்க வழியில் ஆவன செய்ய வேண்டும். செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். மக்களும் அறிஞரும், அரசியலாரும் இவ்வழி ஒன்றுபட்டு உழைப்பார்களாயின் தமிழ் நாட்டில் கலை மணம் கமழும்; ஆடலும் பாடலும் அழகுற விளங்கும். அந்நாள் விரைந்து வருவதாக!



# உள்ளுறையும் இறைச்சியும்

**○**

பேராசிரியர்,

ஆ. சிவலிங்கனுர்,

மயிலம்.

## (1) உள்ளுறை

### இளம் பூரணர் கருத்து

உள்ளுறை யென்ருல் உள்ளே உறைவது என்பது பொருள். அதாவது சொல்லப்பட்ட சொற் பொருளுக்குள்ளே வேறும் ஒரு பொருள் உறைவதாம் (தோன்றுவதாம்) அது ஐந்து வகைப்படும். அவை. உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்பனவாம் இவ்வைவகை யுள்ளுறைகளும் கருப் பொருள்களை நிலைக்கள மாகக் கொண்டு வரும்.

### உடனுறை

அவற்றுள் உடனுறை உள்ளுறை யாவது தன்னேடு உடன் இருப்பது ஒன்றைப் பற்றிச் சொல்ல அதிலிருந்து வேறு ஒரு பொருள் தோன்றுவதாம்.

தலைவன் ஒருவன் தலைவி யொருத்தியோடு களவில் கூடி வந்தான். அவன் அவளை மணந்து கொள்வதில் ஆவல் காட்டா மல் இருந்தான். அவனை விரைவில் தலைவியை மணந்து கொள் ளும் படித் தூண்ட நினைத்தாள் தலைவியின் தோழி. வழக்கம் போல் ஒரு நாள் பகலில் அவன் தலைவியைக் கூடலாம் என்று வந்தான். அன்று ஒரு புன்னை மர நிழலில் கூடுவதாக எண்ணம். அதுவே சமயம் என்று நினைத்த தோழி அவனிடம் பின் வரு மாறு கூறினள்.

---

இக்கட்டுரையில் வரும் கருத்துகளை மறுக்க எண்ணும் அறி ஞர்களைக் கட்டுரை முழுவதும் முடிந்த பின்னர் மறுக்க வேண்டுகிறேம்.

''தலைவனே! இன்று இதோ காணப்படும் புன்னை மர நிழலில் தலைவியைக் கூடலாம் என்று வந்திருக்கின்றாய். இப்புன்னை மரம் தோன்றிய வரலாறு கூறக்கேள். ஒரு நாள் தலைவியும் நாங்களும் மணலில் காயை மறைத்து ஆடும் ஆட்டத்தை ஆடிக் கொண்டிருந்த போது மறந்து ஒரு காயை மணலிலேயே மறைத்து விட்டுப் போய் விட்டோம். அது முளைக்கத் தொடங்கி விட்டது. அது கண்டு நாங்கள் அதை பாலையே தண்ணீராக ஊற்றி வளர்த்தோம். அது கண்ட எங்கள் அன்னை இப்புன்னை உங்களுக்கெல்லாம் தங்கையாக இருக்கட்டும் என்று சொன்னாள். அன்று முதல் இதை எம் தங்கையாகவே கருதி வருகின்றோம். அதனால் இப்புன்னை மரத்தின் நிழலில் உன்னோடு அளவளாவுதலுக்கு வெட்கப்படுகின்றோம். எனவே இந்த மர நிழலை விட்டு வேறு நிழலுக்குச் செல்க. இச்சோலையில் வேறு மரங்களின் நிழல் நிறைய உண்டு''

இவ்வாறு தோழி சொன்னதின் கருத்தை நாம் உணர்தல் வேண்டும். தோழி தங்களுடன் உறை பொருளாகக் கூறியது புன்னைமரம். அம்மரத்தைத் தாய். தங்கையாகக் கருத வேண்டும் என்றாள். என்று சொல்வதால், ''அங்கு அடிக்கடித் தாய் வருவாள்'' என்றும் ''அதனால் உனது ஒழுக்கம் வெளிப்படும் ஆதலின் பகலில் நீ இங்கு வருவதை விட்டு விடு'' என்றும் தோழி சொல்லியதாகக் கொள்ளலாம் மேலும் 'புன்னை மர நிழலில் அளவளாவுவதற்கு வெட்கப்படுகின்றோம்' என்று தோழி சொல்லியதிலிருந்து. புன்னையைத் தங்கையாகக் கருதுவதால் உறவினர்க்கு முன்னே காதலர்கள் அளவளாவுதல் கூடாது ஆதலின் தங்கையாகக்கருதும் புன்னை நிழலில் அளவளாவுதற்கும் வெட்கப்படுகின்றோம்; அதனால் இக்களவொழுக்கத்துக்கே அஞ்சுகின்றோம்.'' என்று சொல்லியதாகக் கொள்ளலாம். இவற்றால் களவில் வந்து இவளைக் கூடுவதை விட்டு விரைவில் மணந்து கொள்க என்று தோழி வற்புறுத்தியதாகக் கொள்ள

வேண்டும். இதுவே உடனுறை கூறி வேறுபொருளை(உள்ளுறை) அறிவித்ததாம்.

இவ்வுடனுறையுள்ளுறையமைந்தபாடல் வருமாறு:

விளையா டாய மொடு வெண்மண லழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை யகைய
நெய் பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும் மினும் சிறந்தது நுவ்வை யாகு மென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும் மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்த்
துறை கெழு கொண்கநீ நல்கின்
நிறை படு நீழல் பிறவுமா ருளவே

(நற்றிணை 172.)

உவமம்

உவம உள்ளுறை உள்ளுறை உவமம் என்றும் கூறப்படும். உவமப்பொருளும் உவமிக்கப்படும்பொருளும் ஆகிய இரண்டில்உவமப்பொருளை மட்டும் சொல்ல அதிலிருந்து உவமிக்கப்படும் பொருளைக்கொள்ளும்படியிருப்பது உவம உள்ளுறையாம். உவமத்தின் உள்ளே உறைவது உவம உள்ளுறை. உவமப்பொருள் எப்படிச் சொல்லப்பட்டதோ அப்படியே நேருக்கு நேராக உவமிக்கப்படும் பொருளைப் பொருத்திக் கொள்வதாக இருக்கும்.

ஒரு தலைவன் தன் அழகிய மனைவியுடன் இன்பம் துய்த்திருந்தவன் அவளை விட்டுப் பிரிந்து பரத்தையைச் சார்ந்திருந்தான்.

அவன் மனைவி அது பற்றித் தன் தோழியிடம் கூறி வருத்தப்பட்டாள். அப்போது தோழி அவளை தேற்ற நினைத்தாள். 'ஆடவன் என்றால் அப்படித்தான் இருப்பான், அது இயற்கை அதற்காக நீ வருந்தாதே என்று சொல்ல நினைத்தாள். இதுவே அவள் உள்ளத்தில் உள்ள பொருள். இதை அப்படியே சொல்லி விடாமல் ஒரு வண்டின் செயலைக்கூறித் தன் கருத்தை வெளிப்படுத்தினாள்.

"தாமரை நிறைய மதுவுடையது; நல்ல அழகுடையது வண்டானது நன்றாக அதன் மதுவை உண்டு ஆடியது; என்றாலும் அதை விட்டு நீங்கிச் சோலைப் பக்கம் சென்று முன்னமே தன் போன்ற வண்டுகள் தேன் உண்டு கழித்து விட்ட மலரில் உள்ள குறைந்த தேனை விரும்பிச் செல்லும்"

இவ்வாறு சொன்னாள் தோழி. சொல்லிய இந்த வண்டின் செயலில் தான் சொல்ல நினைத்த கருத்தை மறைத்து வைத்தாள். அறிவுள்ள தலைவி அதைப் புரிந்து கொள்வாள்.

"தாமரை போன்றவள் இன்பமும் அழகும் நிறைந்த தலைவி அத்தாமரையை நுகர்ந்து நீங்கிய வண்டு போன்றவன் தலைவியின் இன்பம் நுகர்ந்து பிரிந்த தலைவன். இவ்வண்டு சோலையில் பிற வண்டுகள் உண்டு கழித்த குறைந்த தேனையுடைய மலரை நாடிச் சென்றது போலத் தலைவனும் பிறரால் அனுபவிக்கப்பட்டு விடப்பட்ட பரத்தையை நாடிச் சென்றான். எனவே வண்டோரனையர் ஆடவர் என்பதுபுலப்படும்" இவ்வாறு நேருக்கு நேராக உவமைக்கு ஏற்பப் பொருளைப் பொருத்திக் கொள்ளும்படி அமைந்த உவமம் உள்ளுறை உவமமாகும். இக்கருத்தமைந்த பாடல் வருமாறு:-

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

## தனித்தமிழ்த் தேர்வுகள்

மதுரைத் தமிழ்ச்சங்கம் இதுவரையில் நடத்திவந்த பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம் என்ற தேர்வுகளை பல்கலைக் கழகப் பாடத்திட்டங்களோடுகூடிய நுழைவுத் தேர்வு, இளம் புலவர் தேர்வு, புலவர்தேர்வு என்னும் தனித்தமிழ்த் தேர்வு களாக நடத்தி, அவற்றில் தேர்ச்சி பெறுபவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்கள் வழங்குகிறது.

### I நுழைவுத் தேர்வு (பிரவேசம்)

இது சென்னைப் பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வு (Vidwan Entrance Examination of the University of Madras) போன்றது சென்னைப்பல்கலைக்கழகம் அவ்வவ்வாண்டில் குறிப்பிடும்பாடநூல் களுடன் நன்னூல் இலக்கணத்தில் 97 நூற்பாக்கள் இம்மதுரைத் தமிழ்ச்சங்க நுழைவுத் தேர்வுக்கு உரியபாடங்களாகும். 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இத்தேர்வுஎழுதலாம். அவர்கள் குறைந்த அளவு E.S.L.C. தேர்வு அல்லது 8 வது படிவம் VIII Std. தேறியிருக்க வேண்டும்.

### II இளம்புலவர் (பாலபண்டிதம்)

இது நுழைவுத்தேர்வுக்கு அடுத்தது வித்துவான் முதனிலைத் (Preliminary) தேர்வு போன்றது சென்னைப் பல்கலைக்கழகம் அவ்வவ்வாண்டு குறிப்பிடும் வித்துவான் முதனிலைத் தேர்வுப்பாட நூல்களோடு மதுரைத் தமிழ்ச்சங்கம் குறிப்பிடும் ஒருசில பாடங் களும், மதுரைத் தமிழ்ச்சங்க இளம்புலவர் தேர்வுக்கு உரியன வாகும்.

சங்க நுழைவுத்தேர்வு, சென்னை, அண்ணாமலைப்பல்கலைக்கழக நுழைவுத்தேர்வுகள் (S. S. L. C. Eligible) ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றில் தேறியவர் மட்டுமே சங்க இளம்புலவர் தேர்வு எழுதலாம்.

### III புலவர் தேர்வு (பண்டிதம்)

இது இளம்புலவர் தேர்வுக்கு அடுத்தது. வித்துவான் இறுதி நிலை(Vidwan Final)போன்றதுசென்னைப் பல்கலைக்கழகம் அவ்வவ் வாண்டு குறிப்பிடும் வித்துவான் இறுதிநிலைத் தேர்வுப்பாட நூல் களுடன் இச்சங்கம் குறிப்பிடும் ஒரு சில பாடங்களும், இச்சங்கப் புலவர் தேர்வுக்கு உரியனவாகும்.

சங்க இளம்புலவர் தேர்வு, சென்னை, அண்ணாமலைப்பல்கலைக்கழக வித்துவான் முதனிலை—புலவர் முதனிலை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றில் தேறியபின் இரண்டாண்டுகள் கழிந்த பின்னரே புலவர்தேர்வு எழுதலாம்.

தேர்வு பற்றிய எல்லாச்செய்திகளிலும் சங்கத்தின் முடிவே இறுதியானது. சங்கவெளியீடான செந்தமிழில் வெளியிடப் பெறும் முடிவுகளே இறுதியான முடிவுகளாகும்.

## தேர்வுநடக்கும் காலம்

இத் தேர்வுகள் 1—3—1 65 அன்று தொடங்கி ஒரு வாரம் நடைபெறும். தேர்வு நேரம்: காலை 10-00 மணிமுதல் 1 மணிவரை.

**நுழைவுத் தேர்வு:-** (1) செய்யுள் உரைநடை நூல்கள், (2) துணைப்பாடங்கள், (3) இலக்கணம்.

**இளம்புலவர் தேர்வு:-** (1) இலக்கியம் I (2) ,, II (3) கட்டுரை (4) இலக்கணம் I (5) ,, II (6) தென்னிந்திய வரலாறு.

**புலவர் தேர்வு:-** (1) இலக்கியம் I (2) ,, II (3) கல்வெட்டு (4) இலக்கணம் I (5) ,, II (6) மொழி இலக்கிய வரலாறு.

## தேர்வு நடைபெறும் ஊர்கள்

1. மதுரை, 2. நாகர்கோவில், 3. திருப்பனந்தாள்.

## தேர்வுக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. | நுழைவுத் தேர்வு | 10—00 |
| 2. | இளம் புலவர் | 15 00 |
| 3. | புலவர் | 20—00 |

விண்ணப்பத்துடன் தேர்வுக் கட்டணம் 1964 நவமபர் 30-க்குள் பாங்க் டிராப்ட் (Bank Draft) ஆக சங்க அலுவலகத்திற்கு வந்துசேரவேண்டும்.

டிசம்பர் 7 க்குள் 1 ரூபாய் தண்டத்துடன் கட்டலாம் குறிப்பிட்ட தேதிக்குப்பின் அனுப்பும் கட்டணமும் விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. கட்டணமும், விண்ணப்பமும் சங்க அலுவலக நேரங்களில் நேரிலும் சேர்ப்பிக்கலாம்.

25 காசு அஞ்சல்தலை அனுப்பினல் விண்ணப்பத்தாளும் பாடத்திட்ட விபரக்குறிப்பும் அனுப்பப்படும்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
தமிழ்ச்சங்கத் தெரு, மதுரை-1

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1